# Kanchipuram District

## முதல் இடைப்பருவத்தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

## கணக்குப்பதிவியல்

பதிவு எண் :

நேரம் : 1.30 மணி | மதிப்பெண்கள் : 50

பகுதி - அ

10 x 1 = 10

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நிதித்தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
   அ) கடனீந்தோர் ஆ) பணியாளர்
   இ) வாடிக்கையாளர் ஈ) அரசு
2. பின்வருவனவற்றில் எது கணக்கியலின் பிரிவுகளில் இடம்பெறாது?
   அ) நிதிநிலைக் கணக்கியல் ஆ) மேலாண்மைக் கணக்கியல்
   இ) மனிதவளக் கணக்கியல் ஈ) மேற்கண்ட ஏதுமில்லை
3. GAAP என்பது
   அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள்
   ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
   இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்
   ஈ) இவற்றுள் ஏதுமில்லை
4. வணிகம் நீண்ட காலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது
   அ) வணிக தனித்தன்மை கருத்து ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து
   இ) கணக்கியல் கால அனுமானம் ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை
5. ஒரு நிறுவனத்தின் சொத்துக்களின் மதிப்பு ₹1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ₹60,000 எனில், அந்நிறுவனத்தின் முதல் ______.
   அ) ₹1,60,000 ஆ) ₹60,000 இ) ₹1,00,000 ஈ) ₹40,000
6. சொத்து கணக்கு கையாள்வது
   அ) தனிப்பட்ட நபர்கள் ஆ) செலவுகள் மற்றும் இழப்புகள்
   இ) சொத்துக்கள் ஈ) வருமானம் மற்றும் இலாபங்கள்
7. ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்
   அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு
   இ) முதல் க/கு ஈ) அனாமத்து கணக்கு
8. இருப்பாய்வு என்பது ஒரு
   அ) அறிக்கை ஆ) கணக்கு
   இ) பேரேடு ஈ) குறிப்பேடு

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



9. இருப்பாய்வில் பற்று பத்தியின் மொத்தமும் வரவுப் பத்தியின் மொத்தமும் வேறுபட்டால் அதை எடுத்து எழுத வேண்டிய கணக்கு

அ) வியாபார கணக்கு ஆ) வேறுபாட்டு கணக்கு

இ) அனாமத்து கணக்கு ஈ) இதர கணக்கு

10. கு.ப.எ. என்பது

அ) பேரேட்டு பக்க எண் ஆ) குறிப்பேட்டு பக்க எண்

இ) சான்று சீட்டு எண் ஈ) ஆணை எண்

## பகுதி - ஆ

II. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 17 கட்டாய வினா) 5 x 2 = 10

11. கணக்கியலை வரையறு.
12. கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய நபர்கள் யாவர்?
13. கணக்கியல் கருத்துக்கள் என்றால் என்ன?
14. ஆதார ஆவணங்கள் என்றால் என்ன?
15. பற்று இருப்பு என்றால் என்ன?
16. இருப்பாய்வின் மாதிரி படிவம் தருக.
17. கீழ்க்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம்பெறுமா அல்லது வரவுப்பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டிடுக.

அ) வெளித்தூக்குக் கூலி ஆ) விற்பனை

இ) கொள்முதல் ஈ) வாராக்கடன்

## பகுதி - இ

III. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 24 கட்டாய வினா) 5 x 3 = 15

18. கணக்கியலின் பொருளை விளக்குக.
19. கணக்கியல் தரநிலைகள் குறித்து சிறுகுறிப்பு வரைக.
20. ஆள்சார் கணக்கின் மூன்று வகைகளை கூறுக.
21. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளில் விடுபட்ட தகவல்களை நிரப்புக.

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | ...................... க/கு ப<br>...................... க/க<br>(ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது ₹20,000) | | 20,000<br>- | -<br>20,000 |
| | ...................... க/கு ப<br>...................... க/கு ப<br>நிஹா க/கு<br>(₹18,800 பெற்றுக்கொண்டு நிஹாவின் ₹19,000 க்கான க/கு தீர்க்கப்பட்டது) | | ..............<br>.............. | .............. |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



22. இரட்டைப்பதிவு முறையின் விதிகள் யாவை?

23. குறிப்பேட்டிற்கும், பேரேட்டிற்குமான வேறுபாடுகள் யாவை? (ஏவையேனும் 3 மட்டும்)

24. விடுபட்ட இடத்தை நிரப்புக.

| | சொத்துக்கள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| அ) | ₹2,00,000 | = | ₹80,000 | + | ? |
| ஆ) | ? | = | ₹1,80,000 | + | ₹40,000 |
| இ) | ₹3,00,000 | = | ? | + | ₹60,000 |

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 x 5 = 15

25. அ) குறிப்பேட்டில் பதிவு செய்யும் படிநிலைகளை விவரி.

(அல்லது)

ஆ) இருப்பாய்வின் குறைபாடுகள் யாவை?

26. அ) விடுபட்ட இடத்தை நிரப்புக.

| | சொத்துக்கள் ₹ = | பொறுப்புகள் ₹ + | முதல் ₹ |
|---|---|---|---|
| அ) | 30,000 | 20,000 | ? |
| ஆ) | 60,000 | 25,000 | ? |
| இ) | ? | 25,000 | 30,000 |
| ஈ) | ? | 10,000 | 80,000 |
| உ) | 25,000 | ? | 15,000 |
| ஊ) | 40,000 | ? | 30,000 |

(அல்லது)

ஆ) பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டினை தயார் செய்க.

i) முருகன் ₹80,000 பணத்துடன் தொழிலை தொடங்கினார்.

ii) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹30,000

iii) ரொக்கமாக வழங்கிய சம்பளம் ₹5,000

iv) குமாரிடமிருந்து சரக்கு வாங்கியதற்கு, பணம் வைப்பு இயந்திரம் மூலமாக செலுத்தப்பட்டது ₹5,000

v) கூடுதல் முதல் இட்டது ₹10,000

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



27. அ) ஜெயசீலி என்னும் தனி வணிகர் ஒரு பலசரக்கு கடையினை நடத்தி வருகிறார். 2018, ஜனவரியில் அக்கடையின் நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன. அவைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க.

| ஜனவரி | ₹ |
|---|---|
| 1. ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 80,000 |
| 2. வங்கியில் செலுத்திய ரொக்கம் | 40,000 |
| 3. ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது | 5,000 |
| 4. லிப்டன் நிறுவனத்திடமிருந்து சரக்குகளை கடனுக்கு கொள்முதல் செய்தது | 10,000 |
| 5. ஜாய் என்பவரிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 11,000 |
| 6. சம்பளத்தை ரொக்கமாக வழங்கியது | 5,000 |
| 7. லிப்டன் நிறுவனத்திடம் ஜனவரி 4 அன்று கொள்முதல் செய்வதற்கான தொகையை காசோலை மூலம் செலுத்தப்பட்டது. | |
| 8. ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 4,000 |
| 9. மின் கட்டணம் ரொக்கமாக செலுத்தப்பட்டது | 1,000 |
| 10. நிலை அறிவுறுத்தலின்படி அறைகலனுக்கு வங்கி செலுத்திய காப்பீட்டு முனைமம் | 300 |

*(அல்லது)*

ஆ) பின்வரும் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்.

| *கணக்கின் பெயர்* | ₹ | *கணக்கின் பெயர்* | ₹ |
|---|---|---|---|
| கொள்முதல் | 1,00,000 | விற்பனை | 1,50,000 |
| வங்கி கடன் | 75,000 | கடனீந்தோர் | 50,000 |
| கடனாளிகள் | 1,50,000 | ரொக்கம் | 90,000 |
| சரக்கிருப்பு | 35,000 | முதல் | 1,00,000 |

*******

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com